Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 30 | உள்ளூர் - 30.01.2026 | வெள்ளி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 31 | வெளியூர் - 31.01.2026 | சனி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

புதன் வக்ர பெயர்ச்சி: இவர்களுக்கு வெற்றிகள்!

பிப். 1 முதல் வரும் 8 முக்கிய மாற்றங்கள்..


த.நா. அரசு திரைப்பட விருதுகள் அறிவிப்பு

அரசு டாக்டர்கள் போராட்டம் தீவிரம்!

# மகாத்மா காந்தி நினைவிடத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி மரியாதை!

டெல்லி, ஜன. 30–

மகாத்மா காந்தியின் 79–வது நினைவுநாளையொட்டி டெல்லி ராஜ்காட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அவரைத்தொடர்ந்து துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். அவரை தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



இந்நிலையில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தேசப்பிதா மகாத்மா காந்தியின் நினைவு நாளில் அவருக்கு எனது நூறு மடங்கு வணக்கங்கள். மதிப்பிற்குரிய பாபு எப்போதும் சுதேசிக்கு வலுவான முக்கியத்துவம் அளித்தார். இது வளர்ந்த மற்றும் தன்னம்பிக்கை கொண்ட இந்தியாவிற்கான நமது உறுதிப்பாட்டின் அடிப்படைத் தூணாகும். அவரது ஆளுமையும் செயல்களும் நாட்டு மக்களை கடமையின் பாதையில் நடக்க என்றென்றும் ஊக்குவிக்கும் என்று தெரிவித்துள்ளார்.



உத்தமர் காந்தியடிகள் 79–வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் .பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, பிரபாகரராஜா, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன்,தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வாரிசு அரசியல் முதல் ஊழல் குற்றச்சாட்டு வரை: முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலடி!

சென்னை, ஜன.30–

சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:–

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ்நாட்டில் இருந்துதான் எழுதப்பட வேண்டும்; அதேபோல், வளர்ச்சியும் தமிழ்நாட்டிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். எதிர்க்கட்சிகளால் முடியாது என்று சொல்லப்பட்ட திட்டங்களைக் கூட நிறைவேற்றி உள்ளோம். தமிழ்நாட்டின் திட்டங்கள் நாட்டின் பல பகுதிகளுக்கு சென்று சேர்ந்து மக்கள் பயனடைந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சி. திமுக ஆட்சி கொண்டு வந்துள்ள திட்டங்களை பல மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன.

நாட்டுக்கே வழிகாட்டி திராவிட மாடல் ஆட்சி என்பதற்கான அடையாளம் மற்ற மாநிலங்களில் நம் திட்டங்களை பின்பற்றுவதுதான். திமுக சொன்னால் சொன்னதை செய்யும் என மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்தனர். சமூகத்தில் எந்த பிரிவினரும் தனித்துவிடக்கூடாது என்பதால்தான் திமுக பார்த்து பார்த்து திட்டங்களை செய்கிறது. தேவைகளுக்கு ஏற்ப திமுக



கொள்கைகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மத்திய பா.ஜ.க. அரசு தொடர்ந்து கொடுத்து வரும் அரசியல் நெருக்கடிகள் அனைத்தையும் எதிர்கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் எதிர்காலத்திற்குத் தேவையான திட்டங்களை நாங்கள் உருவாக்கி வருகிறோம். எங்களுடைய கொள்கைகளும் காலத்திற்கு ஏற்ப Evolve ஆகி வருகின்றன. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களும், ஏன் ஊரகப் பகுதிகளும்கூட வளர்ச்சியடைந்துள்ளன. சிறப்பான உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளைக் கொண்டுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். வாரிசு அரசியல் என்பது எங்களை களத்தில் எதிர்க்க முடியாதவர்கள் சொல்லும் இத்துப்போனக் குற்றச்சாட்டு. எல்லாமே பழைய ஸ்கிரிப்டுதான். பாஜகவினர் ஊழல் குற்றச்சாட்டு கூறுகின்றனர்; ஆனால் பாஜகவுடன் இருப்பவர்கள் எல்லோரும் ஊழல் வாதிகள்தான், சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள்தான் அதிமுக.

கூட்டணியில் இல்லாத சமயத்தில் அதிமுக மீது பல ஊழல் குற்றச்சாட்டுகளை வைத்தீர்கள். இப்போது உங்கள் வாஷிங் மிஷினில் அவர்களை எல்லாம் வெளுத்துட்டீர்களா?. இதுவரை எங்கள் மீது வைத்துள்ள ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் உள்ளதா?.

நடக்கப்போகும் சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாடு Vs தேசிய ஜனநாயக கூட்டணி என்ற கோணத்தில் நடக்கிறது. தமிழகத்தில் என்.டி.ஏ. கூட்டணி கட்டாயப்படுத்தி ஏற்படுத்தப்பட்டது; என்.டி.ஏ. கூட்டணி துரோகக் கூட்டணி. சமூகநீதி, சமத்துவம், சமூக நல்லிணக்கம் மற்றும் மக்கள் நலன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் அரசே திராவிட மாடல் அரசு ஆகும். இவ்வாறு அவர் கூறினார்.

## தங்கம் தான் மீட்டர்..

# இனி பொருளாதாரம் தான் மேட்டர்..

## பட்ஜெட்-க்கு முன் 'ஷாக்' கொடுத்த மத்திய அரசு..!

புதுடெல்லி, ஜன. 30–

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று ( 30.01.2026) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த 2025–26 பொருளாதார ஆய்வறிக்கை, தங்கம் மற்றும் வெள்ளி விலை கடுமையாக உயர்ந்து ள்ளதை உலகளாவிய நிதி மற்றும் புவிசார் அபாயங்களின் அறிகுறியாக சுட்டிக்காட்டியுள்ளது.



உலக வர்த்தகம் இப்போது பலதரப்பு வளர்ச்சிக்கு பதிலாக பாதுகாப்பு மற்றும் அரசியல் காரணிகளால் வடிவமைக்கப்படுகிறது என்று பொருளாதார ஆய்வறிக்கையில் மத்திய அரசு எச்சரிக்கிறது. 2025ஆம் ஆண்டில் தங்க விலை கடுமையாக உயர்ந்தது. அமெரிக்க டாலர் பலவீனமடைந்தது, உண்மையான வட்டி விகிதங்கள் தொடர்ந்து குறைவது, புவிசார் மற்றும் நிதி அபாயங்கள் அதிகரித்தது ஆகியவை இதற்கு முக்கிய காரணங்கள் என பொரு ளாதார ஆய்வறிக்கையில் பட்டியலிட்டுள்ளது மத்திய அரசு.

தங்கம் தான் உலகின் பொருளாதார அபாயத்தை அளவிடும் அளவுகோலாக (Barometer) செயல்படுகிறது எனவும், இதனாலேயே தங்கம் மற்றும் வெள்ளியை கோர் பணவீக்க கணக்கீட்டில் சேர்க்கவில்லை பொருளாதார ஆய்வறிக்கையில் மத்திய அரசு தெரிவித்துள்ளது. பணவீக்கம் பெரும்பாலும் உள்நாட்டு சந்தையை அடிப்படையாக கொண்டதாக இருக்கும், ஆனால் தங்கம், வெள்ளி விலையோ உள்நாட்டு தேவை–விநியோகத்தால் அல்லாமல், உலக நிதி நிலவரங்களால் பெரிய அளவில் மாற்றம் கண்டு வருகிறது. இதனால் core inflation கணக்கீட்டில் தங்கம், வெள்ளியை சேர்க்கப்படவில்லை. கோர் பணவீக்கம் (துங்கம், வெள்ளி தவிர்த்து) குறைவாக இருப்பது உள்நாட்டு பொருளாதாரத்தில் சப்ளை பக்கம் வலுப்பெற்று வருவதை காட்டுகிறது. இந்தியாவுக்கு தங்கம், வெள்ளி விலை உயர்வு இரு வகையான சிக்னலை தருகிறது என்றால் மிகையில்லை.

**நல்ல செய்தி:**

தங்கம், வெள்ளி தவிர்த்த பணவீக்கம் குறைவாக உள்ளது. உள்நாட்டு விநியோக அமைப்பு வலுப்பெற்று வருகிறது.

**ஆபத்தான செய்தி:**

உலக வர்த்தகம் இப்போது அரசியல் அடிப்படையில் நடக்கிறது. வரி, தடைகள், கட்டுப்பாடுகள் அதிகரிக்கின்றன. வர்த்தகம் எதிர்பாராத விதத்தில் மாறக்கூடும் நிலைமை தொடர்ந்து இருக்கிறது. இந்தியா சற்று பாதுகாப்பாக உள்ளது. ஐடி, சேவை துறை ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டில் பணியாற்றும் இந்தியர்கள் தாய்நாட்டிற்கு தொடர்ந்து அனுப்பும் பணம் ஆகியவை இந்திய சந்தைக்கு பலமாக உள்ளது. ஆனால் நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு வலுவான உற்பத்தி ஏற்றுமதி அவசியம். ஆய்வு, உலக அபாயங்கள் அதிகரித்தால் நாணய மதிப்பு ஏற்ற இறக்கம், மூலதன ஓட்டம் திடீர் மாற்றம், இறக்குமதி சார்ந்த நாடுகளுக்கு அழுத்தம் ஏற்படும் என்று எச்சரிக்கிறது.

**சாதாரண மக்களுக்கு இது என்ன பொருள்?**

உலகில் அபாயங்கள் அதிகரிக்கும்போது தங்கம், வெள்ளி விலை உயரும். இந்தியாவில் பணவீக்கம் கட்டுப்பாட்டில் இருப்பது நல்லது.

ஆனால் வர்த்தக பதற்றங்கள் அதிகரித்தால் பொருட்கள் விலை மாறலாம். இந்த நிலையை மாற்ற மத்திய அரசு உற்பத்தி துறையை வலுப்படுத்த வேண்டும். இதேபோல் உள்நாட்டு தேவை மற்றும் நுகர்வை அதிகரிக்க கொள்கை அளவில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டும். இதனால் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். பொருளாதாரம் உறுதியாக இருக்கும்.

# அஜித்பவார் விபத்து: விமானியின் தவறே!

மும்பை, ஜன. 30–

மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் கடந்த ஜனவரி 28 ஆம் தேதி விமான விபத்தில் உயிரிழந்த சம்பவம் நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

பாராமதிக்கு அவர் சென்றுகொண்டிருந்த 'லியர் ஜெட் 45' விமானம் கட்டுப்பாட்டை இழந்து ஓடுபாதை அருகே விழுந்து வெடித்துச் சிதறியது.

இதில் அஜித் பவார், அவரின் பாதுகாவலர், விமானத்தை ஓட்டிச்சென்ற விமானி மற்றும் துணை பெண் விமானி, பணிப்பெண் என 5 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த விமானி சுமித் கபூரின் மரணம் குறித்த ஒரு சோகமான தகவல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

உண்மையில், விபத்துக்குள்ளான அந்த 'லியர் ஜெட் 45' விமானத்தை அன்று கேப்டன் சுமித் கபூர் ஓட்ட வேண்டியதே கிடையாது.

அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டிய மற்றொரு விமானி மும்பையின் கடும் போக்குவரத்து நெரிசலில்



சிக்கிக்கொண்டார்.

விமானம் புறப்பட வேண்டிய நேரம் நெருங்கியும் அந்த விமானி வராததால், சில மணி நேரங்களுக்கு முன்பாகவே சுமித் கபூருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஹாங்காங்கில் இருந்து சில நாட்களுக்கு முன்பே இந்தியா திரும்பியிருந்த அவர், நிறுவனத்தின் உத்தரவை ஏற்று அஜித் பவாரை பாராமதிக்கு அழைத்துச் செல்ல ஒப்புக்கொண்டார்.

விபத்து நடந்த இடத்தில் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவிற்கு எரிந்து போயிருந்தன. சுமித் கபூரின் கையில் இருந்த பிரேஸ்லெட் மூலமாகவே அவரது உடல் அடையாளம் காணப்பட்டது என அவரது நண்பர்கள் தெரிவித்தனர். வானிலை மோசமாக இருந்ததால் விமானியின் கணிப்பு தவறாக இருந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் கூறப்பட்டாலும், சுமித்தின் நண்பர்கள் அதை மறுக்கின்றனர்.

அவருக்குப் பல ஆயிரம் மணிநேரம் விமானம் ஓட்டிய அனுபவம் இருப்பதால், அவர் தவறு செய்ய வாய்ப்பில்லை என்றும், ஏதோ ஒரு தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே விபத்து நடந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். சுமித் கபூரின் மகன் மற்றும் மருமகனும் விமானிகளாகப் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை மணி

வெள்ளிக்கிழமை 30.01.2026

விசுவாவசு தமிழ் வருடம்

தை மாதம் 16-ம் தேதி

# அண்ணலின் பொது நலம் காணும் வாரிசுகள்1



இன்று 2026 ஜனவரி 30–ஆம் தேதி வெள்ளிக்கிழமை. மகாத்மா காந்தி என்கிற மனிதப் புனிதர் மறைந்து 78 ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த மண்ணில் அவர் வாழ்ந்தது 78 ஆண்டுகள் மூன்று மாதம் 28 நாள்களே! ஆனால், ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து சாதிக்க முடியாததை சாதித்துக் காட்டிய சரித்திர நாயகன் அவர்! ''நான் ஒரு சாதாரண மனிதன்' என்று சொன்னார்; சொன்னபடியே வாழ்ந்து மறைந்தார்.

மகாத்மா மரணித்த போது, முதலாவது மகன் ஹரிலாலுக்கு வயது 59; இரண்டாவது மகன் மணிலாலுக்கு வயது 55; மூன்றாவது மகன் ராமதாஸுக்கு வயது 50; நான்காவது மகன் தேவதாஸுக்கு வயது 47.

மகாத்மா மறைந்த நாளன்று அவரது மூத்த மகன் ஹரிலால் மும்பையில் ஒரு தெருமுனை தேநீர் கடையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். ''துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி மகாத்மா மரணமடைந்தார்' என்ற செய்தியை வானொலி வாயிலாகக் கேட்டார்.

உடனடியாக குவளையைத் தூக்கி எறிந்து விட்டு, ''என் தந்தையைக் கொன்றவனை, நான் கொல்லாமல் விடமாட்டேன்; பழிக்குப்பழி வாங்கியே தீருவேன்' என்று கூச்சலிட்டார்.

இரவோடு இரவாக புதுதில்லிக்கு விரைந்தார்: இறுதிச் சடங்குகள் முடிந்த அடுத்த நாள் – பால் ஊற்றி அஸ்தி எடுக்கும் நாளன்றுதான் புதுதில்லி சேர்ந்தார். தன் தம்பி தேவதாஸ் வீட்டுக்குச் சென்றார்; தேவதாஸின் மனைவி லட்சுமியைப் பார்த்து, தேம்பி தேம்பி அழுதார். எதுவும் பேசவில்லை.

அழுகையைக் குறைப்பதற்காக லட்சுமி அம்மாள் ''அஸ்தி எடுக்கும் சடங்குக்காவது நீங்கள் போக வேண்டும்! குடும்பத்தோடு நீங்களும் செல்வது நல்லதாயிற்றே' என்றாள்.

அதற்கு, ''இல்லை, என் தம்பிகளே அந்தச் சடங்கைச் செய்யட்டும்; அந்தப் பெருமையைப் பெறுவதற்கு நான் தகுதியற்றவன்; நான் ஒரு பாவி! அந்த பாக்கியத்தைப் பெற நான் கொடுத்து வைக்கவில்லை' என்றார்.

காசநோய் பாதிப்புக்கு உள்ளாகி, மும்பை நகராட்சி மருத்துவமனையில் 5 மாதங்கள் கழித்து 18–06–1948 அன்று ஹரிலால் இறந்து விட்டார். வாழும்போது தந்தை சொல்லைக் கேட்காத மகன், மறையும் போது தந்தையை நினைத்து நினைத்து சோகத்தோடும், ஏக்கத்துடனும், ஏமாற்றத்துடனும் மறைந்தார்.

மகாத்மாவின் மரணத்தின்போது, இரண்டாவது மகன் மணிலால் தென்னாப்பிரிக்காவில் இருந்தார். பீனிக்ஸ் ஆசிரமத்தின் நிர்வாகியாகவும், இந்தியன் ஒப்பினியன் இதழின் ஆசிரியராகவும் பணிபுரிந்து வந்தார். அண்ணல் உருவாக்கிய உண்மையான, உன்னதமான சமூக நலப் போராளி அவர். 25 முறை அரசால் கைது செய்யப்பட்டவர்; சுமார் 15 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர், அண்ணல் நடத்திய உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று 9 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவர். மகாத்மா காந்தி உள்பட எவருமே இவ்வளவு அதிக காலம் சிறைவாசத்துக்கு உள்ளாகியவர் அல்லர்.

''மணிலால் வழியாகவே நான் காந்தியைக் கண்டேன்' என்றார் தென்னாப்பிரிக்காவின் தேசப் பிதாவாகக் கருதப்படும் நெல்சன் மண்டேலா.மரணச் செய்தி கேட்டபோது, மணிலால் மனம் வருந்தினார்.

இந்தியாவுக்கு வரவில்லை; தன் கடமையைத் தொடர்ந்தார் மணிலால். ''என் தந்தையை இழந்து விட்டேன்; என்துயரத்தை விளக்க இயலாது. அவரது உடல் மறைந்து விட்டது; ஆனாலும், அவரது ஆன்மா உலகை என்றும் வழிநடத்துமாக!' எனப் பதிவு செய்துள்ளார்.

மகாத்மாவின் மரணத்தின்போது, அவரது மூன்றாவது மகன் ராமதாஸ் செய்தி அறிந்தவுடன், தன் மனைவி நிர்மலா பென்னுடன் நாகபுரியிலிருந்து புதுதில்லிக்கு விரைந்தார்.

இவர்தான் மகாத்மாவின் ஈமக்கிரியைகளைச் செய்தவர். கங்கையில் அண்ணலின் அஸ்தியைக் கரைத்ததும் இவரே. ஆரம்பத்தில் இவருக்கு அரசியல் ஆர்வம் இருந்தது. ஆனால், தன் வாரிசுகள் அதிகார அரசியல் பீடத்துக்கு வரக் கூடாது என்பதில் மகாத்மா காந்தி உறுதியாக இருந்தார். அதை முழுமையாக ஏற்றுக் கொண்ட ராமதாஸ், தன் மனைவி நிர்மலா பென்னுடன் இணைந்து வார்தாவின் சேவா கிராமம் ஆசிரமத்தை, தன் வாழ்நாள் இறுதிவரை நடத்தினார். ஆசிரமத்தை தன் உழைப்பின் மூலம் ஈட்டிய வருமானத்தைக் கொண்டே நடத்திய முன்மாதிரி சமூக சேவகராகத் திகழ்ந்தார்.

அண்ணலின் நான்காவது மகன் தேவதாஸ் காந்தி ஆரம்பம் முதல் இறுதிக்காலம் வரை தனது தந்தையுடன் இருந்தவர். மகாத்மா காந்தியின் நெருக்கமான உதவியாளராகவும், கிட்டத்தட்ட நண்பராகவும் இருந்தார். புகழ்பெற்ற புணேஒப்பந்தத்தில் மகாத்மா காந்தியின் சார்பில் கையொப்பமிட்டவர் இவரே!

அண்ணல் விரும்பியபடி, வாழ்வில் எந்தவித அதிகாரத்தையும் அடைய எண்ணாதவர். சலிப்பில்லாத ஓர் அரசியல் போராளி அவர். ராஜாஜியின் மகள் லட்சுமியை மணந்தவர். ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்' நாளிதழில், தன் இறுதிக்காலம் வரை ஆசிரியராகப் பணிபுரிந்தவர். காந்தியக் கொள்கைகளை உலகெங்கும் பரப்ப பெரும் முயற்சி எடுத்தவர். தேவதாஸின் வாரிசுகள் தாரா காந்தி, ராஜ்மோகன் காந்தி, ராமச்சந்திர காந்தி, கோபால் கிருஷ்ண காந்தி ஆகியோர். காந்தியில் தொடங்கி, மூன்று தலைமுறையைச் சார்ந்த அவரது வாரிசுகள் காந்தியத்தை உலகெங்கும் இன்றுவரை பரப்பி வருகிறார்கள். உலகில் எந்தத் தலைவருக்கும் இத்தகைய சுயநலமற்ற பொது நலன் பேணும் வாரிசுகள் அமையப் பெற்றதில்லை.

வாழ்க காந்தியம்! வளர்க மானுடம்!

# பிப்ரவரி 1 முதல் அமலுக்கு வரும் 8 முக்கிய மாற்றங்கள்..



பிப்ரவரி மாதம் வரும் மாற்றங்கள்.. பொதுமக்கள் கவனத்துக்கு!

டெல்லி, ஜன. 30–

வருகிற பிப்ரவரி மாதம் பொதுமக்களின் குடும்ப பட்ஜெட்டை பாதிக்கும் வகையில் நிறைய மாற்றங்கள் வருகின்றன. அதுகுறித்து நீங்கள் முன்கூட்டியே தெரிந்துகொள்வது நல்லது. . பிப்ரவரி 1, 2026 முதல், எல்பிஜி சிலிண்டர்களின் விலைகள் வங்கி, பெட்ரோல், டீசல், இபிஎஃப்ஒ, சம்பளம், பான் மசாலா மற்றும் சிகரெட் விலைகள் தொடர்பான பல

முக்கியமான பணம் சார்ந்த மாற்றங்கள் இவைதான்.

**பிப்ரவரி மாத மாற்றங்கள்!**

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் வங்கி, கிரெடிட் கார்டு, சேமிப்பு கணக்கு, ரயில்வே, மற்றும் சிலிண்டர் விலை போன்ற பல விஷயங்களில் மாற்றங்கள் ஏற்படுவது வழக்கம். இந்த முறையும், பிப்ரவரி மாதம் பட்ஜெட்டுடன் சேர்த்து, பணம் தொடர்பான ஐந்து புதிய விதிகள் அமலுக்கு வர உள்ளன. இவை உங்கள் அன்றாட வாழ்க்கையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே இந்த மாற்றங்கள் என்ன என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

மத்திய பட்ஜெட் தாக்கல்!

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1ஆம் தேதி மக்களவையில் மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளார். இந்த பட்ஜெட்டில் நடுத்தர வர்க்கத்தினரும், வருமான வரி செலுத்துவோரும் பல எதிர்பார்ப்புகளை வைத்துள்ளனர். இந்த பட்ஜெட்டில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, பெண்களுக்கு அதிகாரமளித்தல், விவசாயிகள் நலன் போன்ற முக்கியமான அறிவிப்புகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கிக் கணக்கு இருக்காது!

ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள உத்தரவின்படி, ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை எந்தவித பரிவர்த்தனையும் இல்லாத ஜீரோ பேலன்ஸ் கணக்குகள் பிப்ரவரி 1 முதல் செயலற்றதாக மாற்றப்படும். அதாவது, உங்கள் வங்கிக் கணக்கில் நீண்ட காலமாக எந்தப் பணப் பரிவர்த்தனையும் செய்யாமல் இருந்தால், அது முடக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, உங்கள் கணக்கு செயலற்றதாக மாறுவதைத் தவிர்க்க, பிப்ரவரி 1ஆம் தேதிக்கு முன் அதில் ஒரு சிறிய பரிவர்த்தனையையாவது செய்வது நல்லது.

**ஃபாஸ்டாக்கில் ஒரு நல்ல செய்தி!**

ஃபாஸ்டாக் மூலம் சுங்கச்சாவடி வசூலை எளிதாக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளது. பிப்ரவரி 1ஆம் தேதி முதல் கார், ஜீப் மற்றும் வேன்களுக்கு வழங்கப்படும் ஃபாஸ்டாக்குகளுக்கு KYC தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், ஃபாஸ்டாக் பயன்படுத்துவோரின் புகார்கள் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஃபாஸ்டாக் பயன்படுத்துவதை மேலும் எளிதாக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

**மினிமம் பேலன்ஸ்!**

பந்தன் வங்கி தனது ஸ்டாண்டர்ட் சேமிப்பு கணக்குகளுக்கான குறைந்தபட்ச இருப்புத் தொகையைக் குறைத்துள்ளது. இந்த புதிய விதிகள் பிப்ரவரி 1 முதல் நடைமுறைக்கு வருகின்றன. இதற்கு முன்பு, குறைந்தபட்ச இருப்புத் தொகை 5,000 ரூபாயாக இருந்தது. ஆனால், பிப்ரவரி 1 முதல் குறைந்தபட்ச இருப்புத் தொகை 2,000 ரூபாயாகக் குறைக்கப்படும். அதன் பிறகு உங்கள் கணக்கில் இந்த 2,000 ரூபாய்க்கு குறைவாக இருப்பு இருந்தால், 0.3 சதவீத கட்டணம் வசூலிக்கப்படும்.

**பான் கார்டு – ஆதார் கார்டு இணைப்பு!**

உங்களுடைய பான் கார்டை ஆதார் அட்டையுடன் இணைப்பதற்கான கடைசி தேதி ஜனவரி 31 ஆகும். இந்த தேதிக்குள் இணைக்கப்படாத பான் கார்டுகள் பிப்ரவரி 1 முதல் செயலிழக்கச் செய்யப்படும். செயலிழந்த பான் கார்டை எந்தவொரு நிதி பரிவர்த்தனைக்கும் நீங்கள் பயன்படுத்த முடியாது. எனவே, உங்கள் பான் கார்டு செயலிழப்பதைத் தவிர்க்க ஜனவரி 31ஆம் தேதிக்குள் ஆதார் கார்டுடன் இணைத்துவிட வேண்டும்.

**சிலிண்டர் விலையில் மாற்றம்!**

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் சமையல் எரிவாயு (LPG), வணிக எரிவாயு மற்றும் விமான எரிபொருள் விலைகளில் மாற்றம் ஏற்படுவது வழக்கம். ஜனவரி 1, அன்று, வீட்டு உபயோகத்திற்கான 14.2 கிலோ சிலிண்டரின் விலை மாறாமல் இருந்தது. ஆனால், 19 கிலோ வணிக சிலிண்டரின் விலை 111 ரூபாய் உயர்த்தப்பட்டது. எனவே இந்த முறையும் பிப்ரவரி 1ஆம் தேதி சிலிண்டர் விலையில் மாற்றம் இருக்கும்.

**வங்கி விடுமுறைகள்!**

ஒவ்வொரு மாதமும் வங்கிகளுக்கான விடுமுறை நாட்கள் குறித்த பட்டியலை ரிசர்வ் வங்கி வெளியிடும். அதன்படி, 2026 பிப்ரவரி மாதத்துக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 9 நாட்களுக்கு வங்கிகள் முடப்பட்டிருக்கும். சனி ஞாயிறு விடுமுறை நாட்கள் மட்டுமல்லாமல், சில உள்ளூர் விடுமுறைகளும் உள்ளன. இந்த நாட்களில் ஆன்லை வங்கிச் சேவை மற்றும் ஏடிஎம்களைப் பொதுமக்கள் எந் தத் தடையும் இல்லாமல் பயன்படுத்தலாம்.

EPFO **3.0 ;**

2026 ஏப்ரல் மாதம் முழுமையாக அமலுக்கு வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு முன்னர் பிப்ரவரி மாதத்தில் இது குறித்த சில முக்கிய அப்டேட்கள் கிடைக்கலாம்.

மத்திய அரசு ஊழியர்கள் 8வது ஊதியக் குழுவின் அமலாக்கத்திற்காக காத்திருக்கிறார்கள். புதிதாக அமைக்கபட்ட குழு தனது பணியை தொடங்கியுள்ள நிலையில், பிப்ரவரியில் சில முக்கிய செய்திகள் கிடைக்கும் என நம்பப்படுகின்றது.

# தன்மானம்தான் முக்கியம்; காங்கிரஸ்காரர்களுக்கு திருப்பி அடிக்கவும் தெரியும் - மாணிக்கம் தாகூர் எம்.பி.!

மதுரை, ஜன. 30–

மதுரையில் சமீபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தி.மு.க. நிர்வாகி கோ. தளபதி, ''நாங்கள் இல்லா விட்டால் 'இந்தியா' கூட்டணியே கிடையாது'' என்று பேசியது குறித்து காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்ட பதிவில், ''இந்த முறை மதுரை வடக்கு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் நிற்க வேண்டும் என்று அன்புத் தலைவர் கார்கேவிடம் கோரிக்கை வைப்பேன். தன்மானம் காக்க சிலருக்கு பாடம் புகட்ட வேண்டும். அதிகார திமிருடன் இருந்தால் தோழமை கட்சிகள் அமைதியாக இருக்கும் காலம் முடிந்து விட்டது'' என்று கூறியிருந்தார். இந்த நிலையில், காங்கிரஸ்காரர்களுக்கு திருப்பி அடிக்கவும் தெரியும் என மாணிக்கம் தாகூர் எம்.பி. கூறியுள்ளார். இது தொடர்பாக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் இன்று செய்தியா




ளர்களிடம் அவர் கூறியதாவது;–

''எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் மதுரை வடக்கு தொகுதியை காங்கிரஸ் நிச்சயமாக கேட்கும். 'இந்தியா' கூட்டணி நாடாளுமன்ற தேர்தலுக்காக உருவாக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்கு பூத்களில் நிர்வாகிகள் இல்லை என்பதை ஏற்க முடியாது.

காங்கிரசுக்கு தன்மானம்தான் முக்கியம். காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு வந்தே மாதரம், ஜே என்று சொல்வது மட்டுமல்ல, திருப்பி அடிக்கவும் தெரியும். காங்கிரஸ் குறித்து பேசிய தி.மு.க. நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# 'விஜய் எங்களை திட்டும்போது நாங்கள் அவரை...' - செல்லூர் ராஜு பேட்டி!




மதுரை, ஜன. 30–


மதுரையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;– ''விஜய் எங்களை திட்டும்போது நாங்கள் அவருக்கு பதிலளிக்காமல் இருக்க முடியுமா? விஜய் அறைக்குள் உட்கார்ந்து கொண்டு அரசியல் பேசுவது நியாயமா? பொதுவாழ்க்கையில் இதுபோன்ற ஒரு நடைமுறையை நாங்கள் இதுவரை சந்தித்ததே இல்லை. அ.தி.மு.க.வில் சேர்க்குமாறு ஓ.பன்னீர்செல்வம் கேட்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளராக இருந்தவருக்கு எப்படி தொடர்பு கொள்ள வேண்டும் என்பது தெரியாதா? தன்னை சேர்க்க வேண்டும் என்று ஊடகங்கள் வழியாகத்தான் கேட்க வேண்டுமா? ஓ.பன்னீர்செல்வம் நாடகம் நடத்துகிறார். அதனைப் பார்த்து மக்கள் சலித்துவி ட்டார்கள். ஊடகத்தில் பேசிப்பேசி தான் அவர் இப்படி ஆகிவிட்டார். அவரது செயல்பாடுகள் அவருக்கு பின்னால் இருப்பவர்களையும் பாதிக்கிறது.'' இவ்வாறு செல்லூர் ராஜு தெரிவித்தார்.

# பாரதி யுவகேந்திரா நிறுவனத் தலைவர் நெல்லை பாலு வீடு திறப்பு விழா!





மதுரை அலங்காநல்லூரில் பாரதி யுவகேந்திரா நிறுவனத் தலைவர் நெல்லை பாலு வீடு திறப்பு விழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை தலைவர் ஆர்பி உதயகுமார் பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார். உடன் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் ஓய்வு பெற்ற எஸ் பி மணிவண்ணன் மற்றும் மற்றும் பலர் உள்ளனர். திறப்பு விழாவின் போது பார்வையற்றோருக்கு அரிசி மூடைகள் தானமாக வழங்கப்பட்டது.





# புதன் வக்ர பெயர்ச்சி: இந்த ராசிக்காரர்களுக்கு அரச போகமும், தொழிலில் பெரும் வெற்றியும் கிடைக்கும்!

ஜோதிடத்தில் 'கோள்களின் இளவரசன்' என்று அழைக்கப்படும் புதன், புத்திசாலித்தனம், தகவல் தொடர்பு மற்றும் வணிகத்தின் கிரகமாகும். புதன் கிரகம் தனது பெயர்ச்சியை மாற்றி, 'வக்ர' நிலைக்கு, அதாவது பின்னோக்கிய இயக்கத்திற்கு மாற உள்ளது. பொதுவாக கிரகங்களின் பின்னோக்கிய இயக்கம் அசுபமானதாகக் கருதப்பட்டாலும், இந்த முறை புதனின் இந்த சிறப்பு இயக்கம் ஐந்து ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டத்தின் கதவைத் திறக்கும். இந்த பெயர்ச்சி நிதி செழிப்பையும், தொழில் வாழ்க்கையில் எதிர்பாராத வெற்றியையும் கொண்டு வரும்.

**புதனின் வக்ர பெயர்ச்சியின் தாக்கம்**

புதன் வக்ர நிலையில் இருக்கும்போது, ஒருவரின் சிந்திக்கும் திறனில் பெரிய மாற்றங்கள் ஏற்படும். இந்த நேரத்தில், நிலுவையில் உள்ள பணிகள் வேகம் பெறும். குறிப்பாக, தர்க்கரீதியான திறன் அதிகரிக்கும், மேலும் இது வணிகம் மற்றும் பரிவர்த்தனைகளில் புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்க சரியான நேரமாகும்.

**மேஷம்**

புதனின் இந்த பெயர்ச்சி மேஷ ராசிக்காரர்களுக்கு பெரும் நிதி நன்மைகளைக் கொண்டு வரும். பணியிடத்தில் உங்கள் திறமைகளுக்கு மரியாதை கிடைக்கும், மேலும் புதிய வருமான ஆதாரங்கள் உருவாகும். இந்த நேரத்தில் பழைய முதலீடுகளிலிருந்து நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக லாபம் பெறுவீர்கள்.

**மிதுனம்**

புதன் மிதுன ராசியின் அதிபதி என்பதால், இந்த மாற்றம் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். உங்கள் பேச்சுத்திறமையால் கடினமான பணிகளையும் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய கூட்டாண்மைகள் லாபகரமாக இருக்கும், மேலும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும்.

**கன்னி**

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த காலகட்டத்தில் தங்கள் தொழில் வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்புமுனை ஏற்படும். தடைபட்டிருந்த பதவி உயர்வுகள் அல்லது இடமாற்றங்கள் இப்போது சீராக நடக்கும். உங்கள் நிதித் திட்டங்கள் வெற்றி பெறும், மேலும் சொத்து வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்**

இந்த ராசிக்காரர்கள் எதிர்பாராத நிதி ஆதாயங்களைப் பெறுவார்கள் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. பரம்பரைச் சொத்து தொடர்பான தொந்தரவுகள் தீர்க்கப்படும். சமூகத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும், மேலும் செல்வாக்கு மிக்கவர்களைச் சந்திப்பதால் எதிர்காலத்தில் நீங்கள் பயனடைவீர்கள்.

**கும்பம்**

புதனின் அருளால் கும்ப ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டம் அதிகரிக்கும். வியாபாரிகள் பெரும் லாபம் பெறுவார்கள். நீங்கள் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலிலும் தெய்வீக சக்தியின் ஆதரவு உங்களுக்குக் கிடைக்கும். காதல் வாழ்க்கையில் இருந்த தடைகள் நீங்கும்.

**அதிக லாபம்**

புதனின் இந்த பெயர்ச்சி ஆராய்ச்சியாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் கணக்காளர்களுக்கு குறிப்பாக நன்மை பயக்கும். இந்த காலகட்டத்தில் தகவல் தொடர்பில் தெளிவு இருப்பதால், பெரிய அளவிலான ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக அமையும். இந்த நேரத்தில் உங்கள் பழைய முதலீடுகளை மறுபரிசீலனை செய்வது நல்ல பலனைத் தரும். புதனின் அருளால், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குக் கவனம் அதிகரிக்கும், மேலும் இந்த பெயர்ச்சி கல்வித் துறையில் முன்னோடியில்லாத சாதனைகளை அடைய அவர்களுக்கு உதவும். புதனின் சுப பலன்களைப் பெற, புதன்கிழமைகளில் பாசிப்பயறு தானம் செய்வதும், விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் செய்வதும் நல்லது.

# பழனியில், பழனி ஆண்டவர் கல்லூரியில் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி!



பழனி, ஜன. 30–

பழனி முருகன் கோவில் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் பழனி ஆண்டவர் ஆண்கள் கல்லூரி மற்றும் பெண்கள் கலைக் கல்லூரியில் படிக்கும், 3ஆம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு, அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் விழா நேற்று( 29.01.2026) பழனி ஆண்டவர் ஆண்கள் கலை கல்லூரியில் நடைபெற்றது. பழனி ஆர்டிஒ கண்ணன் தலைமை தாங்கினார். கோவில் துணை ஆணையர் வெங்கடேசன், தாசில்தார் பிரசன்னா, ஆண்கள் கல்லூரி முதல்வர் ரவிசங்கர், பெண்கள் கல்லூரி முதல்வர் புவனேஸ்வரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். செந்தில்குமார் எம்எல்ஏ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, 1936 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இதில் மாவட்ட மாணவரணி செயலாளர் அஸ்வின் பிரபாகரன், நகர மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, திமுக நகர செயலாளர் வேலுமணி, ஒன்றிய செயலாளர்கள் சாமிநாதன், சௌந்தரபாண்டியன், கவுன்சிலர் காளீஸ்வரி பாஸ்கரன், நகர இளைஞரணி செயலாளர் லோகநாதன், முன்னாள் நகர் மன்ற தலைவர் எஸ் கே கே ஹக்கிம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## சாப்பிட்டவுடன் குளியலா..? மாரடைப்பு, பக்கவாதம் ஏற்படும் அபாயம்..!!



உணவு உண்ட கையோடு குளிக்கச் செல்லும் வழக்கம் நம்மில் பலரிடம் உள்ளது. ஆனால், "சாப்பிட்ட உடனே குளிக்கக் கூடாது" என்று நம் வீட்டுப் பெரியவர்கள் சொல்வதில் மிகப்பெரிய அறிவியல் உண்மை ஒளிந்துள்ளது. உண்ட உணவு முறையாக செரிமானம் ஆக வேண்டுமானால், இரைப்பையைச் சுற்றி இரத்த ஓட்டம் சீராக இருக்க வேண்டும். ஆனால், சாப்பிட்டவுடன் குளிப்பது அந்தச் செரிமானச் சங்கிலியைச் சிதைத்து, உடலில் தேவையற்ற உபாதைகளை உண்டாக்கும் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

நாம் உணவு உண்ட பிறகு, செரிமானப் பணிக்காக உடலில் உள்ள இரத்த ஓட்டம் அனைத்தும் வயிற்றுப் பகுதியை நோக்கித் திரும்பும். அந்த நேரத்தில் நாம் குளிக்கும்போது, உடலின் வெப்பநிலை மாறுகிறது. குறிப்பாக வெந்நீரில் குளிக்கும்போது உடல் வெப்பநிலை சட்டென்று உயர்வதால், செரிமானத்திற்குத் தேவையான இரத்தம் மற்றும் ஆற்றல் அனைத்தும் சருமத்தைப் பாதுகாக்க உடலின் வெளிப்புறப் பகுதிக்குச் சிதறிப் போகிறது. இதனால் செரிமான வேகம் குறைந்து, நெஞ்செரிச்சல், வயிற்று உப்புசம் மற்றும் வாயுத் தொல்லை போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

மேலும், அதிக சோடியம் நிறைந்த உணவுகளைச் சாப்பிட்டுவிட்டு உடனடியாகச் சுடுநீரில் குளிப்பது இரத்த அழுத்தத்தைச் சட்டென்று உயர்த்தக்கூடும். இது இதயத் துடிப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி, பக்கவாதம் அல்லது மாரடைப்பு போன்ற தீவிரமான ஆபத்துகளை உருவாக்கும் காரணியாகவும் அமைகிறது. அதேபோல், குளிர்ந்த நீரில் குளிப்பதும் ஆரோக்கியமானதல்ல; இது இரத்த நாளங்களைச் சுருங்கச் செய்து, செரிமான உறுப்புகளுக்குச் செல்லும் இரத்தத்தின் அளவைக் குறைத்துவிடும்.

சாப்பிட்ட பிறகு குறைந்தது 30 முதல் 60 நிமிடங்கள் வரை இடைவெளி விட்டு குளிப்பதே பாதுகாப்பானது. அவசரமாகக் குளிப்பதைத் தவிர்த்து, உடலின் உள் உறுப்புகள் தடையின்றிப் பணியாற்ற அவகாசம் அளிப்பதே ஆரோக்கியமான வாழ்விற்கு அடிப்படையாகும். எனவே, இனிமேல் உணவிற்கும் குளியலுக்கும் இடையே போதிய இடைவெளியை கடைபிடிப்பது சிறந்தது.

# பிரதமர் மோடி அமெரிக்க தலைவர்களுக்கு வழங்கிய விலையுயர்ந்த பரிசுகளின் பட்டியல் வெளியீடு!

டெல்லி, ஜன. 30–

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இதர இந்தியத் தலைவர்கள், அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜோ பைடன் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்கு வழங்கிய விலையுயர்ந்த பரிசுகள் குறித்த விவரங்களை அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.



பிரதமர் மோடி, முன்னாள் அதிபர் ஜோ பைடனுக்கு வழங்கிய பரிசுகளில் மிகவும் விலையுயர்ந்தது ரூ.6.5 லட்சம் மதிப்பிலான 'ஸ்டெர்லிங் சில்வர்' ரெயில் சிலை ஆகும். இது 2024 ஜூலை மாதம் வழங்கப்பட்டது. அமெரிக்காவின் முன்னாள் முதல் பெண்மணி ஜில் பைடனுக்கு, சுமார் ரூ.2.5 லட்சம் மதிப்பிலான விலையுயர்ந்த காஷ்மீர் பஷ்மினா சால்வை மோடி பரிசளித்துள்ளார். 2023–ல் ஜோ பைடனுக்கு வழங்கப்பட்ட பரிசுகளில் ஒரு பிரத்யேகமான சந்தனக் மரப் பெட்டி, கைவேலைப்பாடுகள் கொண்ட ஒரு வெள்ளி விளக்கு மற்றும் வெள்ளி விநாயகர் சிலை ஆகியவை அடங்கும்.

முன்னாள் துணை அதிபர் கமலா ஹாரிஸிற்கு, ரூ.1.11 லட்சம் மதிப்பிலான 'கிருஷ்ண ராசலீலா வெள்ளிப் பெட்டி' வழங்கப்பட்டுள்ளது. அவரது கணவர் டக்ளஸ் எம்ஹாப்பிற்கு ரூ.49,000 மதிப்பிலான உடையில் அணியும் கஃப்லிங்க்ஸ் வழங்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவனுக்கு காஷ்மீர் பஷ்மினா சால்வை வழங்கியுள்ளார்.

அதேபோல், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், அமெரிக்க முன்னாள் பாதுகாப்புச் செயலர் லாயிட் ஆஸ்டினுக்கு ரூ.3 லட்சம் மதிப்பிலான நடராஜர் வெண்கலச் சிலையை வழங்கியுள்ளார்.

அமெரிக்கச் சட்டப்படி, அந்நாட்டு அதிகாரிகள் பெறும் பரிசுகளின் மதிப்பு 480 டாலருக்கு மேல் இருந்தால் அதன் விவரங்களை வெளிப்படுத்த வேண்டும். அதன்படி, மோடி வழங்கிய இந்தப் பரிசுகள் அனைத்தும் தற்போது அமெரிக்கத் தேசிய ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

# அரசுப்பணி பதவி உயர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு: அரசாணை வெளியிட்டது தமிழ்நாடு அரசு!

சென்னை, ஜன. 30–

அரசுப் பணி பதவி உயர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4% ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டம், 2016ன் பிரிவு 33ன் கீழ், தமிழ்நாடு தலைமைச் செயலக சேவையில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளுக்கான பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனப் பணியிடங்களை அடையாளம் காணும் வகையில் தமிழ்நாடு அரசு புதிய அரசாணை ஒன்றை வெளியிட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் வெளியிடப்பட்ட அரசாணை படி, அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதற்கான நடைமுறைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டம், 2016ன் படி, அரசு நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகள் பணியாற்ற ஏற்ற பணியிடங்களை அரசு அடையாளம்



காண வேண்டும் என்பது கட்டாயமாகும். இதன் தொடர்ச்சியாக, 2023 மற்றும் 2025 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணைகள் மற்றும் கடந்தாண்டு அக்டோபர் 14ம் தேதி நடந்த நிபுணர் குழு கூட்டத்தின் பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை அரசு பரிசீலனை செய்துள்ளது. அதன் அடிப்படையில், தலைமைச் செயலக சேவையில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கு பொருத்தமான பணியிடங்களை அடையாளம் காண அரசு முடிவு செய்துள்ளது. உதவியாளர், உதவி பிரிவு அலுவலர், பிரிவு அலுவலர், துணை செயலாளர், தனிப்பட்ட எழுத்தர், மூத்த தனிப்பட்ட எழுத்தர், தனிப்பட்ட உதவியாளர், தனிச்செயலாளர், மூத்த தனிச்செயலாளர், பதிவுக் க்ளார்க், பதிவு உதவியாளர், தட்டச்சர் மற்றும் மூத்த தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் இதற்காக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த பணியிடங்களில் பார்வை குறைபாடு, குறைந்த பார்வை, செவித்தடை, உடல் இயக்கக் குறைபாடு, நரம்பியல் மற்றும் மனநல குறைபாடுகள் உள்ளிட்ட மாற்றுத் திறன் வகைகள் பணியிடத்திற்கேற்ப பதவிகள் வழங்கப்படும். குறிப்பாக, தட்டச்சர் மற்றும் மூத்த தட்டச்சர் பணியிடங்களுக்கு, எழுத்துப் புரிதல், சரியான தட்டச்சு மற்றும் கணக்கீட்டு திறன் அவசியம் என தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலக சேவையில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கு பொருத்தமான பணியிடங்களை அடையாளம் காண அரசு முடிவு செய்துள்ளது.

# ஈரானை நோக்கி பயணிக்கும் அதிநவீன போர்க்கப்பல்கள்: டிரம்ப் தகவல்!

வாஷிங்டன், ஜன.30–

ஈரானை நோக்கி மிகவும் சக்திவாய்ந்த கப்பல்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றன என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். இது குறித்து நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: சீனா உடன் பிரிட்டன் வர்த்தக உறவு கொண்டிருப்பது மிகவும் ஆபத்தானது. கனடா சீனாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது இன்னும் ஆபத்தானது என்று நான் நினைக்கிறேன். கனடா சிறப்பாகச் செயல்படவில்லை.

அவர்கள் மிகவும் மோசமாகச் செயல்படுகிறார்கள். சீனாவை ஒரு தீர்வாகப் பார்க்க முடியாது. எனக்கு



சீனாவைப் பற்றி நன்றாகத் தெரியும். அதிபர் ஜி ஜின்பிங் என் நண்பர் என்பது எனக்குத் தெரியும். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். ஈரானை நோக்கி மிகவும் சக்திவாய்ந்த போர் கப்பல்கள் பயணித்துக்கொண்டிருக்கின்றன. அவற்றை நாங்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாமல் இருந்தால் அது நன்றாக இருக்கும். நான் அவர்களிடம் இரண்டு விஷயங்களைச் சொன்னேன். முதலாவதாக, அணு ஆயுதம் கூடாது.

இரண்டாவதாக, போராட்டக்காரர்களைக் கொல்வதை நிறுத்துங்கள். அவர்கள் ஆயிரக்கணக்கில் மக்களைக் கொல்கிறார்கள். உங்களுக்குத் தெரியுமா, இரண்டு வாரங்களுக்கு முன்பு நான் 837 தூக்குத் தண்டனைகளை நிறுத்தினேன். ஆனால் அவர்கள் ஏதேனும் செய்தே ஆக வேண்டும். இது போன்ற ஒரு சம்பவத்தை யாரும் பார்த்ததில்லை.இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

# வேலை வாய்ப்பு

## 10–ஆம் வகுப்பு தேர்ச்சு..! 28,740 பணியிடங்கள்.. இந்தியா போஸ்ட் மெகா வேலைவாய்ப்பு.. தேர்வு இல்லாமல்..!




நீங்கள் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, ஒரு பாதுகாப்பான அரசு வேலையைத் தேடுகிறீர்கள் என்றால், இந்திய அஞ்சல் துறை (இந்தியா போஸ்ட்) உங்களுக்காக ஒரு சிறந்த வாய்ப்பைக் கொண்டு வந்துள்ளது. ஆம்.. 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இந்தத் துறை கிராமின் தக் சேவக் (GDS) பதவிகளுக்கான ஒரு மாபெரும் ஆட்சேர்ப்பை அறிவித்துள்ளது. இந்த ஆட்சேர்ப்பின் மிகச் சிறப்பான அம்சம் என்னவென்றால், தேர்வுக்காக நீங்கள் எந்த எழுத்துத் தேர்வும் எழுத வேண்டியதில்லை; மாறாக, உங்கள் 10–ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் நேரடித் தகுதி பட்டியல் தயாரிக்கப்படும். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்வோம்.

இந்தியா போஸ்ட் GDS ஆட்சேர்ப்பு 2026: பதவி விவரங்கள் இந்திய அஞ்சல் துறை இந்த ஆட்சேர்ப்பு மூலம் மொத்தம் 28,740 பதவிகளை நிரப்ப உள்ளது. நாட்டின் பல்வேறு அஞ்சல் வட்டங்களில் உள்ள கிராமப்புறங்களில் அஞ்சல் அமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்தப் பணி நியமனங்கள் செய்யப்படுகின்றன. இந்த ஆட்சேர்ப்பு முக்கியமாக மூன்று வகையான பதவிகளுக்கு நடைபெறும்:

கிளை அஞ்சல் அதிகாரி (BPM): கிளை அஞ்சல் அலுவலகத்தை நிர்வகித்தல் மற்றும் நிதி பரிவர்த்தனைகளைக் கையாளுதல்.

உதவி கிளை அஞ்சல் அதிகாரி (ABPM): அஞ்சல் விநியோகம் மற்றும் பிற பணிகளில் BPM–க்கு உதவுதல்.

கிராமின் தக் சேவக் (GDS): அஞ்சல்களை விநியோகித்தல் மற்றும் பிற கிளைப் பணிகளில் உதவுதல்.

**முக்கிய தேதிகள் மற்றும் விண்ணப்பக் கட்டணம்**

இந்த ஆட்சேர்ப்புக்கான ஆன்லைன் விண்ணப்ப செயல்முறை ஜனவரி 31, 2026 அன்று தொடங்குகிறது. ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பிப்ரவரி 14, 2026 வரை தங்கள் படிவங்களை நிரப்பலாம். படிவத்தை நிரப்பும்போது ஏதேனும் தவறு ஏற்பட்டால், அதைச் சரிசெய்வதற்காக பிப்ரவரி 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் 'திருத்த சாளரம்' திறக்கப்படும். விண்ணப்பக் கட்டணத்தைப் பொறுத்தவரை, பொது, ஓபிசி மற்றும் EWS பிரிவுகளைச் சேர்ந்த ஆண்களுக்கு இது வெறும் ரூ. 100 ஆகும், அதே சமயம் அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள், SC, ST மற்றும் PwD விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பம் முற்றிலும் இலவசம்.

**தகுதி மற்றும் தேர்வு செயல்முறை**

இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க, அங்கீகரிக்கப்பட்ட வாரியத்தில் இருந்து 10–ஆம் வகுப்பு (உயர்நிலைப் பள்ளி) தேர்ச்சி பெற்றிருப்பது கட்டாயமாகும். மேலும், உங்கள் 10–ஆம் வகுப்பில் கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களைப் படித்திருக்க வேண்டும். வயது வரம்பைப் பொறுத்தவரை, விண்ணப்பதாரர்கள் 18 முதல் 40 வயதுக்குள் இருக்க வேண்டும், இருப்பினும், அரசு விதிகளின்படி இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு வயது வரம்பில் தளர்வு வழங்கப்படும். தேர்வு செயல்முறை முற்றிலும் வெளிப்படையானது; உங்கள் 10–ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் ஒரு தானியங்கி தகுதிப் பட்டியல் தயாரிக்கப்படும், மேலும் முதல் குறும்பட்டியல் பிப்ரவரி 28, 2026 அன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சம்பளம் மற்றும் விண்ணப்பிப்பது எப்படி?**

கிராமின் டாக் சேவக் மற்றும் ABPM பதவிகளுக்கான ஆரம்பச் சம்பளம் மாதம் ரூ.10,000 முதல் ரூ.24,470 வரையிலும், BPM பதவிக்கு மாதம் ரூ.12,000 முதல் ரூ.29,380 வரையிலும் இருக்கும். விண்ணப்பிக்க, நீங்கள் indiapostgdsonline.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும், பின்னர் நீங்கள் விரும்பும் அஞ்சல் வட்டம் மற்றும் பிரிவைத் தேர்ந்தெடுத்து, படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். நீங்கள் சைக்கிள் ஓட்டத் தெரிந்தவராகவும், உள்ளூர் மொழி அறிவு பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

# பாகிஸ்தான் - வங்கதேசம் இடையே நேரடி விமான சேவை.. 14 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தொடக்கம்!

பாகிஸ்தான், ஜன. 30–

வங்கதேசம் – பாகிஸ்தான் இடையே கடந்த 14 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நேரடி விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

பிமான் பங்களாதேஷ் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமானம், நேற்று 150 பயணிகளுடன் டாக்காவிலிருந்து பாகிஸ்தானின் கராச்சி நகருக்குப் புறப்பட்டுச் சென்றது.

2012–ஆம் ஆண்டுக்குப் பிறகு இரு நாடுகளுக்கு இடையே நடைபெறும் முதல் வழக்கமான நேரடி விமானச் சேவை இதுவாகும். இதுவரை வங்கதேச மக்கள் பாகிஸ்தானுக்குச் செல்ல துபாய் அல்லது தோஹா வழியாகச் செல்ல வேண்டிய நிலை இருந்தது.

ஆனால் இனி வாரத்திற்கு இரண்டு முறை நேரடி விமானங்கள் இயக்கப்பட உள்ளன.

2024–இல் வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா அரசு வீழ்ந்த பிறகு, இடைக்கால தலைவராக முகமது யூனுஸ் பதவி ஏற்றார். அவரது தலைமையின்கீழ் அந்நாடு பாகிஸ்தானுடன் தனது உறவை மேம்படுத்தி வருகிறது. அதே சமயம், இந்தியாவுடனான உறவில் விரிசல் அதிகரித்து வருகிறது.

ஏற்கனவே 2024 நவம்பரில் கராச்சியிலிருந்து வங்கதேசத்தின் சிட்டகாங் துறைமுகத்திற்குச் சரக்குக் கப்பல் போக்குவரத்துத் தொடங்கப்பட்ட நிலையில் தற்போது விமானச் சேவையும் தொடங்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் 2016-2022: சிறந்த நடிகர்-நடிகைகள், இயக்குநர்கள் லிஸ்ட்...!

சென்னை, ஜன. 30–

தமிழ்நாடு அரசு, சிறந்த நடிகர்–நடிகைகள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த படம், சிறந்த இசையமைப்பாளர்கள் என பல்வேறு பிரிவுகளில் விருதுகளை அறிவித்திருக்கிறது. இதையடுத்து, இதில் சிறந்த நடிகர்களுக்கான பட்டியலில் விஜய் சேதுபதி, தனுஷ் உள்ளிட்ட பலர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 2016 முதல் 2022 வரையிலான பட்டியல் இது. இந்த நிலையில், இதில் யார் யார் என்னென்ன பிரிவுகளில் விருதுகளை வாங்குகின்றனர் என்பதை இங்கு பார்ப்போம்.

**சிறந்த நடிகர் மற்றும் நடிகைகள்:**

திரைப்பட விருதுகளுக்காக நடிகர்கள் விஜய் சேதுபதி, கார்த்தி, தனுஷ், ஆர்.பார்த்திபன், சூர்யா, ஆர்யா, விக்ரம் பிரபு ஆகியோர் சிறந்த நடிகர்களாகவும், நடிகைகள் கீர்த்தி சுரேஷ், நயன்தாரா, ஜோதிகா, மஞ்சு வாரியார், அபர்ணா பாலமுரளி, லிஜோ மோல் ஜோஸ், சாய் பல்லவி ஆகியோர் சிறந்த நடிகைகளாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. @Udhaystalin அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் 2016–2022



ஆம் ஆண்டுகளுக்கான அரசு திரைப்பட விருதுகள், 2014–2022 ஆம் ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள் 2015–16 முதல் 2021–2022 வரையான கல்விஆண்டுகளுக்குரிய எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும்

**சிறந்த படங்கள்:**

சிறந்த படங்களாக மாநகரம், அறம், பரியேறும் பெருமாள், அசுரன், கூழாங்கல், ஜெய்பீம், கார்கி ஆகிய திரைப்படங்கள் சிறந்த படங்களாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2016–2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த இசையமைப்பாளர்களுக்கான விருது!

சாம் CS– புரியாத புதிர்
ஹிப் ஹாப் தமிழா– கவண்
சந்தோஷ் நாராயணன் – வடசென்னை
தமன்– மகாமுனி
ஜி.வி. பிரகாஷ் – சூரரைப் போற்று
ஷான் ரோல்டன் – ஜெய் பீம்
ஏ.ஆர்.ரஹ்மான் – பொன்னியின் செல்வன் 1

சிறந்த சின்னத்திரை நெடுந்தொடர்கள்:

சின்னத்திரை சிறந்த நெடுந்தொடர்களுக்கு முதல் பரிசாக ரூ.2 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.1 இலட்சமும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் பரிசாக ரூ.1 இலட்சமும், ஆண்டின் வாழ்நாள் சாதனையாளர் பரிசாக ரூ.1 இலட்சமும் வழங்கப்படுவதுடன், சிறந்த கதாநாயகன், கதாநாயகி, சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**விழா எப்போது?**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு அரசின் சார்பில் 2016–2022 ஆம் ஆண்டுகளுக்கான அரசு திரைப்பட விருதுகள், 2014–2022 ஆம் ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள் 2015–16 முதல் 2021–2022 வரையான கல்விஆண்டுகளுக்குரிய எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் ஆகியவற்றை வழங்குகிறார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் பிப்ரவரி 13ஆம் தேதியன்று மாலை 4.30 மணி அளவில் விழா நடைபெறுகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881




## ரஜினியின் 173–வது படம் ஹாலிவுட் ரீமேக்கா?




கமல்ஹாசன் தயாரிப்பில் ரஜினிகாந்த் நடிக்கும் புதிய படத்தை முதலில் சுந்தர் சி இயக்குவதாக இருந்தது. பின்னர் அவரது திடீர் விலகலை தொடர்ந்து, சிபி சக்கரவர்த்தி படத்தை இயக்கப் போகிறார் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இது ரஜினிகாந்தின் 173–வது படமாகும். இந்த படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

தற்போது இந்த படம் குறித்து சில தகவல்கள் வெளியாகி இருக்கிறது. ஹாலிவுட் படமான 'தி அவுட்பிட்' படத்தின் தழுவலாக இந்த படம் உருவாக இருப்பதாகவும், ரஜினிகாந்த் இதில் டெய்லராக நடிக்கப் போவதாகவும், இது 70 காலகட்டத்தில் நடக்கும் கதைக்களம் என்றும் பேசப்படுகிறது.

ரஜினிகாந்த் – கமல்ஹாசன் கூட்டணியில் தயாராகும் இந்த புதிய படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு விரைவில் நடைபெற இருக்கிறது.

# முதுநிலை மருத்துவப் படிப்புக்கு அவகாசம் நீட்டிப்பு!!

புதுச்சேரி, ஜன. 30–



புதுச்சேரியில் நீட் மதிப்பெண் அடிப்படையில் முதுநிலை மருத்துவப் படிப்புக்கு கலந்தாய்வை சென்டாக் நிர்வாகம் நடத்துகிறது. முதுநிலை மருத்துவப் படிப்பில் 3ம் சுற்று கலந்தாய்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம் பிப்.2வரைநீடிக்கப்பட்டுள்ளது.



# பா.ஜ.க.வின் சுற்றுப்பயண பொறுப்பாளர்களாக எல்.முருகன், அண்ணாமலை நியமனம்!



சென்னை, ஜன. 30– தமிழகத்தில் சட்டசபை தேர்தல் கூட்டணி அமைப்பதில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க., பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.தி.மு.க, பா.ஜ.க. அ.ம.மு.க., தமிழ் மாநில காங்கிரஸ், த.ம.மு.க உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில், பா.ஜ.க. சுற்றுப்பயண பொறுப்பாளராக எல்.முருகன், அண்ணாமலை நியமனம் செய்யப்பட்டுள்ளதாக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிங்காநல்லூர், மதுரை தெற்கு, விருகம்பாக்கம், காரைக்குடி, ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு பா.ஜ.க.வின் சுற்றுப்பயண பொறுப்பாளராக அண்ணாமலை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருப்பரங்குன்றம், ராதாபுரம், வால்பாறை, திருப்பூர் வடக்கு, உதகமண்டலம் ஆகிய தொகுதிகளுக்கு ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் சுற்றுப்பயண பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டசபையில் பிப்ரவரி 2-வது வாரம் இடைக்கால பட்ஜெட் தாக்கல்: முக்கிய அறிவிப்புகள் வெளியாகுமா?



சென்னை, ஜன. 30– தமிழக சட்டசபை கடந்த 20–ந் தேதி (செவ்வாய்க்கிழமை) கவர்னர் உரையுடன் தொடங்கியது. ஆனால், தமிழ்த்தாய் வாழ்த்தை தொடர்ந்து தேசிய கீதம் பாடப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி, கவர்னர் ஆர்.என்.ரவி தனது உரையை புறக்கணித்து வெளியேறினார். ஆனாலும், அவரது உரை தமிழில் வாசிக்கப்பட்டு அவைக்குறிப்பில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து, 22–ந் தேதி முதல் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடந்தது. 24–ந் தேதி முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினின் பதில் உரையுடன் சட்டசபை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

**இடைக்கால பட்ஜெட் தாக்கல்:**

இந்த நிலையில், இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக தமிழக சட்டசபை மீண்டும் கூட இருக்கிறது. இடைக்கால பட்ஜெட்டை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்ய உள்ளார். அடுத்த 2 மாதத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதால், இந்த முறை தி.மு.க. அரசால் முழு பட்ஜெட்டை தாக்கல் செய்ய முடியாது. பிப்ரவரி மாதம் 2–வது வாரம் கடைசியில் (13–ந் தேதி), அல்லது 3–வது வாரம் தொடக்கத்தில் (16–ந் தேதி) இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படலாம் என தெரிகிறது. தமிழக சட்டசபை தேர்தல் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகளும் அந்த நேரத்தில் தமிழகம் வந்து ஆலோசனை நடத்த வாய்ப்பு இருப்பதால், அவர்களின் வருகையை பொறுத்து தேதி முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது. சட்டசபை தேர்தலுக்கு முன்பு நடைபெறும் கடைசி பட்ஜெட் இது என்பதால், பொதுமக்களை கவரும் வகையில் கவர்ச்சிகரமான அறிவிப்புகள் இடம்பெறும் என்று தெரிகிறது. குறிப்பாக, மகளிர் உரிமைத்தொகை ரூ.2,500 ஆக உயர்த்தப்படும் என்று அறிவிப்பு வெளியாக இருப்பதாக கூறப்படுகிறது.

# உக்ரைன் மீது ஒரு வாரத்துக்கு தாக்குதலை நிறுத்த ரஷியா சம்மதம்- அமெரிக்க அதிபர் டிரம்ப் தகவல்!



அமெரிக்கா, ஜன. 30– அமெரிக்க அதிபர் டிரம்ப், அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது:–

உக்ரைனில் கடுமையான உறைபனி நிலவும் நிலையில், தலைநகர் கீவ்மற்றும் பிற நகரங்கள் மீது ஒரு வாரத்திற்கு தாக்குதல் நடத்த வேண்டாம் என்று ரஷிய அதிபர் புதினிடம் கேட்டு கொண்டேன். இந்த அசாதாரண குளிர்காலத்தில் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று நான் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டேன்.

இந்த தற்காலிக போர் நிறுத்தத்திற்கு புதின் ஒப்பு கொண்டார். இது சிறப்பான முடிவு. இதை உக்ரைன் தரப்பில் முதலில் நம்ப முடியவில்லை. அவர்கள் மிகவும் மோசமான சூழலில் போராடி வருவதால் அதை கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர் என்றார். ஆனால் இது தொடர்பாக ரஷியாவிடம் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

# சபரிமலை தங்கம் கொள்ளை வழக்கு: நடிகர் ஜெயராமிடம் வாக்குமூலம் பதிவு!

திருவனந்தபுரம், ஜன. 30– சபரிமலை தங்கம் கொள்ளை வழக்க தொடர்பாக நடிகர் ஜெயராமிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணை நடத்தி வாக்குமூலத்தை பதிவு செய்தனர். இதற்காக சென்னையில் உள்ள அவரது வீட்டுக்கு சிறப்பு புலனாய்வு குழுவினர் சென்றனர்.



அவரிடம் தங்கம் கொள்ளை வழக்கில் முக்கிய குற்றவாளியான உன்னிகிருஷ்ணனுடனான தொடர்பு பற்றி விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. புனரமைக்க கொண்டு செல்லப்பட்டிருந்த துவார பாலகர் சிலைகளின் தங்க கவசம் மற்றும் தங்கத்தகடு உள்ளிட்டவைகள் நடிகர் ஜெயராமின் வீட்டில் வைத்து பூஜை செய்த படங்கள் வெளியாகின.

ஆகவே அவரும் தங்க கொள்ளை வழக்கு விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளார். மேலும் அவரை இந்த வழக்கில் சாட்சியாக்க முடிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, அவரிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

நடிகர் ஜெயராம் கடந்த 40 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் மாலையணிந்து சபரிமலைக்கு சென்று வருகிறார். அப்போது தனக்கு உன்னிகிருஷ்ணனுடன் பழக்கம் ஏற்பட்டதாக அவர் கூறியிருக்கிறார். சபரிமலைக்கு புதிதாக செய்யப்பட்ட தங்கத்தகடை வீட்டில் பூஜைக்காக வைத்தால் செழிப்பு ஏற்படும் என்பதால் தனது வீட்டில் வைத்து பூஜை செய்யப்பட்டதாகவும், மேலும் காவலில் நடைபெற்ற பூஜையிலும் கலந்து கொண்டதாகவும் நடிகர் ஜெயராம் கூறியுள்ளார்.

சபரிமலை தங்கம் கொள்ளை வழக்கில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நடிகர் ஜெயராமிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றிருப்பது இந்த வழக்கில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம் - தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 30– ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–



தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 4,000 கோடி மதிப்பில் 30 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 2,000 கோடி, தமிழ்நாடு அரசின் 7.50 சதவீத பிணையப் பத்திரங்கள் 2036 மறுவெளியீடு ரூபாய் 1,000 கோடி மற்றும் தமிழ்நாடு அரசின் 7.53 சதவீத பிணையப் பத்திரங்கள் 2037 மறுவெளியீடு ரூபாய் 1,000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் பிப்ரவரி 3, 2026 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E–Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) பிப்ரவரி 3, அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜன 30– தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.4,800 குறைந்து ரூ.1,29,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.600 குறைந்து ரூ.16,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை தொடர்ந்து வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.415–க்கும் பார் வெள்ளி 4 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# டி.டி.வி.தினகரன் உள்ளே.. ஓ.பன்னீர்செல்வம் வெளியே..: எடப்பாடி பழனிசாமியின் மாறுபட்ட முடிவுக்கு என்ன காரணம்?

சென்னை, ஜன. 30– அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்–அமைச்சருமான ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அக்கட்சி சிதைந்து போனது. கட்சியின் இருந்து ஓ.பன்னீர்செல்வம், வி.கே.சசிகலா, டி.டி.வி. தினகரன் ஆகியோர் வெளியேற்றப்பட்டனர்.

அதன்பிறகு, அ.தி.மு.க. எடப்பாடி பழனிசாமி வசமானது. கட்சியின் பொதுச் செயலாளராக அவர் நீடித்து வருகிறார். அ.தி.மு.க.வில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களில்,



டி.டி.வி.தினகரன் மட்டும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ளார். ஆனால், ஓ. பன்னீர்செல்வம், வி.கே.சசிகலா ஆகியோர் கட்சி எதையும் தொடங்கவில்லை.

**டி.டி.வி.தினகரன் வருகை**

இந்த நிலையில், எடப்பாடி பழனிசாமியை 'துரோகி' என்று கடுமையாக விமர்சித்து வந்த டி.டி.வி.தினகரன், தற்போது அ.தி.மு.க. அங்கம் வகிக்கும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ளார். இந்த கூட்டணியின் முதல்–அமைச்சர் வேட்பாளரான எடப்பாடி பழனிசாமியும் டி.டி.வி.தினகரன் வருகையை ஏற்றுக்கொண்டார்.

ஏற்கனவே, 'அ.தி.மு.க.வில் பிரிந்து கிடக்கும் சக்திகள் ஒன்றிணைய வேண்டும்' என்று கோரிக்கை விடுத்துவந்த முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், அது நடக்காது என தெரிந்தவுடன் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் சென்று இணைந்திருக்கிறார்.

**நான் ரெடி, நீங்க ரெடியா?**

ஆனால், ஓ.பன்னீர்செல்வம் எந்தவித முடிவையும் அறிவிக்காமல் மவுனம் காத்து வந்தார். அதனால், அவரும் விஜய்யுடன் கைகோப்பார் என்றே அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது.

ஆனால், பெரியகுளத்தில் நேற்று தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்திய ஓ.பன்னீர்செல்வம், "அ.தி.மு.க.வில் இணைய நான் ரெடி, எடப்பாடி பழனிசாமி, டி.டி. வி.தினகரன் ரெடியா?" என்று தடாலடி அறிவிப்பை வெளியிட்டார்.

**நிராகரிப்பு**

ஆனால், அவரது கோரிக்கையை சற்று நேரத்திலேயே எடப்பாடி பழனிசாமி நிராகரித்தார். அது எப்படி, 'துரோகி' என்று கூறிய டி.டி.வி.தினகரனையே ஏற்றுக்கொண்ட எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வத்தை ஏற்க மறுப்பது ஏன்? என்ற கேள்வி அரசியல் வட்டாரத்தில் மேலோங்கியது.

எடப்பாடி பழனிசாமியை பொறுத்தவரை அ.தி.மு.க.வை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவே விரும்புகிறார். டி.டி. வி.தினகரனை கூட்டணியில் சேர்க்க சம்மதித்தார் என்றால், அவர் அ.ம.மு.க. என்ற பெயரில் தனிக்கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார். அவரால் அ.தி.மு.க.வில் பிரச்சினை எதுவும் வராது என்று எடப்பாடி பழனிசாமி நம்புகிறார்.

**எடப்பாடி பழனிசாமி கோபம்**

அதே நேரத்தில், ஓ.பன்னீர்செல்வம் கட்சி எதுவும் தொடங்காத நிலையில், அவரை அ.தி.மு.க.வில் தான் மீண்டும் இணைக்க வேண்டிய சூழல் வரும் என்பதால், 'இரட்டை தலைமை' என்ற கோஷம் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு இருப்பதாக எடப்பாடி பழனிசாமி கருதுகிறார்.

ஏற்கனவே, கட்சி தலைமை விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு, தேர்தல் ஆணைய கதவுகளை ஓ.பன்னீர்செல்வம் தட்டியதுடன், சென்னையில் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்குள்புகுந்து ஆவணங்களையும் எடுத்து சென்றதால், அவர் மீது எடப்பாடி பழனிசாமி கடும் கோபத்தில் இருக்கிறார்.

**இனி தேவையே இல்லை**

அதனால்தான் டி.டி.வி.தினகரனை ஏற்றுக்கொண்ட எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வத்தை ஏற்க மறுக்கிறார் என்று கூறப்படுகிறது.

மேலும், கூட்டணியில் தற்போது டி.டி. வி.தினகரன் இணைந்துள்ளதால், தென்மாவட்டங்களில் அ.தி.மு.க. வாக்கு வங்கி சிதறாது என்றும் எடப்பாடி பழனிசாமி கருதுவதால் தான், ஓ.பன்னீர்செல்வம் இனி தேவையே இல்லை என்ற முடிவுக்கு அவர் வந்ததாக அ.தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

# சொத்துவரி பெயர் மாற்றத்துக்கு சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் கட்டணம் நிர்ணயம்..!!



சென்னை, ஜன. 30– சொத்துவரி பெயர் மாற்றத்துக்கு சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் கட்டணம் நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. குடியிருப்புகளின் சொத்துவரி பெயர் மாற்றத்துக்கு ரூ.500 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி

# அலுவல் கூட்டம், வருகைப் பதிவேடு, வகுப்பு புறக்கணிப்பு - அரசு டாக்டர்கள் போராட்டம் தீவிரம்!

சென்னை, ஜன. 30– அரசு டாக்டர் சங்கங்கள் கூட்டமைப்பு சார்பில் 48 மணி நேரம் உண்ணாவிரத போராட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது.

அதன் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பாலகிருஷ்ணன் தலைமையில் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உண்ணாவிரதம் இருந்து வந்த டாக்டர்களிடம் அரசு உயர் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதில் சுமுக உடன்பாடு ஏற்படாததால் இன்று முதல் மீண்டும் போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.



ஒத்துழையாமை போராட்டம் என்ற அடிப்படையில் அரசு டாக்டர்கள் பல்வேறு பணிகளைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்து உள்ளனர்.

அரசு ஆஸ்பத்திரியில் பயோமெட்ரிக் வருகை பதிவை புறக்கணிப்பது வாட்ஸ் அப் குழு, ஆன்லைன் மற்றும் நேரடியாக நடைபெறும் அலுவல் சார்ந்த கூட்டங்களை புறக்கணித்தல், மருத்துவ மாணவர்களின் வகுப்புகள் புறக்கணிப்பு என அரசுக்கு ஒத்துழைக்காமல் போராட்டங்களை தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் டாக்டர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் குறித்து அரசு டாக்டர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன் கூறியதாவது:–

டாக்டர்கள் கோரிக்கையை நிறைவேற்றி தர வேண்டுமென 4 ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்தி வருகிறோம். சம்பள உயர்வு, ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றும் டாக்டர்களுக்கு ரூ.3000 படி உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தினோம்.

அதனை நிறைவேற்றவில்லை. பொதுமக்கள் நலன் பாதிக்கக்கூடாது என்பதற்காக நாங்கள் போராட்டத்தை மேற்கொள்ளாமல் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் நிறைவேற்ற முன்வரவில்லை.

இன்று முதல் எங்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தி உள்ளோம். 4 பணிகளை புறக்கணித்து உள்ளோம். பிப்ரவரி 4–ந் தேதி வரை ஒத்துழையாமை போராட்டம் நடைபெறும். அதன் பின்னர் மாநில செயற்குழு கூடி அடுத்தகட்ட போராட்டத்தை முடிவு செய்வோம். தற்போது நடைபெறுகின்ற இந்தப் போராட்டத்தால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. மருத்துவர்கள் சேவையில் எந்த குறைவும் இருக்காது. அடுத்த வாரம் புதன்கிழமை மீண்டும் அடுத்த கட்ட போராட்டம் குறித்து அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பி.டி. உஷா கணவர் காலமானார்...!



திருவனந்தபுரம், ஜன. 30– கேரள மாநிலம் கோழிக்கோட்டை சேர்ந்த பிரபல தடகள வீராங்கனை பி.டி.உஷா. சர்வதேச தடகள போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்று ஏராளமான பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ள இவர் "இந்திய தடகளங்களின் அரசி" என்று குறிப்பிடப்படுகிறார்.

பி.டி.உஷா தற்போது இந்திய ஒலிம்பிக் சங்க தலைவராகவும், மாநிலங்களவை எம்.பி.யாகவும் இருக்கிறார். இவரது கணவர் ஸ்ரீனிவாசன் மத்திய தொழில் பாதுகாப்பு படையில் துணை போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார். பி.டி.உஷா பாராளுமன்ற கூட்டத்தில் பங்கேற்பதற்காக டெல்லி சென்றிருந்தார். ஆகவே கோழிக்கோடு மாவட்டம் கொயிலாண்டி அருகே திக்கோடியில் உள்ள அவரது வீட்டில் கணவர் ஸ்ரீனிவாசன் இருந்தார். அவர் இன்று அதிகாலை திடீரென தனது வீட்டில் மயங்கி விழுந்தார். இதையடுத்து அவர் அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக, அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து அவரது உடல் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

ஸ்ரீனிவாசன் இறந்தது குறித்து டெல்லியில் இருந்த பி.டி.உஷாவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர் உடனடியாக கேரளா விரைந்தார். பி.டி.உஷா – ஸ்ரீனிவாசன் தம்பதிக்கு உஜ்வல் விக்னேஷ் என்ற மகன் இருக்கிறார். அவர் டாக்டர் ஆவார்.


# தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020